## ரூ.80 கோடியில் வள்ளுவர் கோட்டம் புனரமைப்பு! வீரமங்கை வேலுநாச்சியாருக்கு சிலை!

# முதல்வர் - அரசின் சாதனைகள், திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் பெருமை!

## சட்டமன்றத்தில் தமிழ் வளர்ச்சி – செய்தித்துறை மானியத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரை!

**சென்னை, ஏப்.18-**

**சட்டப்பேரவையில் தமிழ் வளர்ச்சி செய்தித்துறை, எழுதுபொருள் அச்சுத் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முதல்வர் மற்றும் அரசின் அறிவிப்புகள், சாதனைகளை எளிமையாக மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பதில் பெருமை கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் செய்தித்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரை வருமாறு :-

பேரவைத் தலைவர் அவர்களே, ‘தமிழ்நாடு’ என்று பெயரிடுவதற்கு முன்பே, 1938 ஆம் ஆண்டில் தமிழ் மொழிக்காக போராட்டக் களத்தில் நினைவில் வாழும் நடராசன் மற்றும் நினைவில் வாழும் தாளமுத்து ஆகியோர் உயிர்த் தியாகம் செய்து முதன் முதலில் ஊட்டிய தமிழ் உணர்வை தொடர்ந்து, நினைவில் வாழும் சர் ஏ.டி. பன்னீர்செல்வம் முதல் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் ஐயா கலைஞர், நினைவில் வாழும் ஐயா பேராசிரியர் போன்றோர்கள் வரை ஊட்டிய உணர்வை தொடர்ந்து மனதில் ஏந்தி, இந்தித் திணிப்பு எதிர்ப்பு உணர்வை அணையவிடாமல் தமிழ்மொழி காக்கும் இலட்சியப் போரின் தலைநாயகனாய் விளங்கி வருகிறார் நம் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்

எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்- செவ்வி

அருமையும் பாரா ரவமதிப்புங் கொள் ளார்

கருமமே கண்ணாயினார்.

எண்ணிய எண்ணங்களை நிறைவேற்றி, வெற்றி காண்பதையே குறிக்கோளாகக் கொள்பவர்கள் தம் உடல் நலனையும் பொருட்படுத்த மாட்டார்கள்; பசியையும் நினைக்க மாட்டார்கள்; கண் உறக்கமும் கொள்ள மாட்டார்கள்; திசை திருப்பிட யார் எதைக் கூறினாலும் அதைப் புறக்கணிப்பார்கள்; காலத்தின் அருமை கருதி, பிறர் அவமதிப்பையும் புறந்தள்ளி கடமைகளைச் செய்வதற்கே முன்னுரிமை தருவார்கள்” என்கிறது இந்த நீதிநெறி விளக்கப் பாடல்.

எனவே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இப்பாடலின் கருத்துக்கேற்ப, மும்மொழித் திணிப்பு திட்டமா? குடியுரிமைத் திருத்தச் சட்டமா? வக்ஃப் வாரியச் சட்டத் திருத்தமா? நாடாளுமன்றத் தொகுதிகள் மறுசீரமைப்பா? அரசின் கொள்கைக்கு எதிரான ஆளுநரின் செயலா? இப்படி எது என்றாலும் ஏற்க முடியாது என்பதைக் குன்றைப்போல் நிமிர்ந்து நின்று தமிழ் மக்களுக்காகவும், தமிழ் நாட்டிற்காகவும் தொடர்ந்து இன்று வரை போராடி தமிழ் மொழி காவலனாக விளங்கி வருகிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

### எல்லார்க்கும் எல்லாம்!

“யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்குபோல, “எல்லார்க்கும் எல்லாம்” என்ற உயர்ந்த தத்துவத்தை உலகிற்கு உணர்த்துகின்ற மாபெரும் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் குடும்பத்தின் தலைவரும், முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் வணங்குகிறேன்.

மேலும், என்னுடைய அரசியல் வாழ்க்கைக்கு தொடர்ந்து ஊக்கமும், ஆக்கமும், வழிகாட்டியும், தொடர்ந்து இன்றைக்கு மக்கள் பணி செய்வதற்கு முதலமைச்சர் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களையும், ஏறத்தாழ 6 முறை சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிடுவதற்கு வாய்ப்பினை வழங்கியதோடு, கழகத்தில் பல்வேறு அமைப்புகளில் எனக்கு பொறுப்புகளை வழங்கி, ஊக்கப்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மீண்டும் வணங்குகிறேன்.

2023-2024-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை உரையின்போது, துணை முதலமைச்சர் அவர்களை பற்றி நான் குறிப்பிட்ட சிலவற்றை இங்கு நினைவுகூர விரும்புகிறேன். உங்களின் வெற்றி, ஆயிரம் விமர்சனங்களுக்கான முற்றுப்புள்ளி” என்று சொன்ன மகேந்திர சிங் தோனி போல, “இங்கே தொடக்க வீரர்கள் நிறைய உண்டு, ஆனால் நான் முடித்துக் காட்டும் வீரன்” என்று சொன்ன உசேன் போல்ட் போல “அரிய செயலைச் செய்து முடிப்பது வலிமையினால் அல்ல, விடா முயற்சியால்” என்ற பிரிட்டிஷ் தத்துவஞானி ஜேம்ஸ் ஆலன் சொன்னதைப் போல தனது செயல்பாட்டின்மூலம் தேசத்தை கவனிக்க வைத்துள்ள கழக இளைஞர் அணியின் செயலாளரும், இளஞ்சூரியன், கழகத்தின் எதிர்கால விடிவெள்ளி, அன்பு இளவல், துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி), அவை முன்னவரும், கழகப் பொதுச் செயலாளருமான நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்ட மக்களுக்கும் எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தேர்தல் வெற்றிக்கு உழைத்திட்ட கூட்டணிக் கட்சியின் தோழர்களையும், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களையும், என்னை ஈன்றெடுத்த மறைந்த என் தாய், தந்தையரையும் வணங்குகிறேன். கழக ஆட்சியில் இரண்டாவது முறையாக அமைச்சராக்கி, இரண்டாவது முறையாக தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைக்கு பதில் சொல்கிற வாய்ப்பையும், ஐந்தாவது முறையாக இம் மாமன்றத்தில் செய்தித் துறை மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறை மானியக் கோரிக்கையை தாக்கல் செய்ய வாய்ப்பளித்தமைக்கும், முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தமிழ்மொழி காக்க 45 நாட்கள் சிறையிலிருந்தேன்!

தலைவன் எவ்வழியோ, அவ்வழியே தொண்டனும் என்பதற்கேற்ப கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு 1986-ல், அன்றைக்கு ஒன்றிய அரசால் திணிக்கப்பட்ட இந்தி திணிப்பை எதிர்த்து, சட்ட நகல் எரிப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு, கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டு, நானும் 45 நாட்கள் சிறையில் வைக்கப்பட்டேன் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் தமிழுக்காக சிறை சென்றதே எனது அரசியல் பொது வாழ்வின் மைல் கல்லாக அமைந்து, மக்கள் பணிக்கு ஊக்கமளித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று நம் தாய்நாட்டின் சுதந்திரப் போராட்டத் தியாகிகளையும், நம் தாய்மொழிக் காவலர்களையும், தமிழ் அறிஞர்களையும் கௌரவிக்கும் துறைக்கு அமைச்சர் என்பதில், நான் கூடுதல் பெருமிதம் கொள்கிறேன். தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறை மீதான எனது பதிலுரைக்கு வருகிறேன்.

நேற்று நடைபெற்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, ஏறத்தாழ 6 மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் பெரி. செந்தில்நாதன், ஜெயங்கொண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் க.சொ.க. கண்ணன், துறையூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் செ. ஸ்டாலின் குமார், காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ம. சிந்தனை செல்வன் அவர்கள், அதேபோல் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர்ஏ.ஜி. வெங்கடாசலம், மேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் ஆகிய நம்முடைய 6 உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளை சொல்லியிருக்கின்றார்கள்.

குறிப்பாக, நம்முடைய உறுப்பினர் ம.சிந்தனை செல்வன் அவர்கள் பேசுகிறபோது, துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பு மிகச் சிறப்பாகவும், முறையாகவும் வகுக்கப்பட்டிருக்கிறது என்று வாழ்த்து தெரிவித்தார்கள். அதற்காக இந்த நேரத்தில் அவருக்கு நன்றியைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய



ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட சிலைகள், அரங்கங்கள், மணி மண்டபங்கள் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச்சொன்னார்கள்.

இன்றைக்கு முதலமைச்சர் அவர்களும் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய பதிலுரையில் உரிய விளக்கங்கள் நிச்சயமாக அடங்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

### தமிழ் வளர்ச்சித் துறை!

தமிழ் வளர்ச்சித் துறை இரண்டு மண்டலங்களாகச் செயல்பட்டு வந்ததை, சீர்திருத்தும் பணியாக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, 6 மண்டலங்களாக சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி எனப் பிரிக்கப்பட்டு, இன்றைக்கு செயல்பட்டு வருகிறது.

அதேபோல், தமிழ் வளர்ச்சித் துறையில் இளங்கலை தமிழ் இலக்கியம் படித்தவர்களுக்கு முதல் முறையாக நேரடி நியமனம்மூலம் 13 உதவி இயக்குநர் பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக எழுத்துத்தேர்வு நடைபெற்று உள்ளது. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் விரைவில் முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் அவர்களுக்கு பணியாணை வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொளகிறேன்.

வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ் கட்டாயம் இடம்பெறுவது தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி எங்களிடத்தில் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

அதன்மூலமாக அரசு மற்றும் வணிகர் சங்க பிரதிநிதிகள் இன்றைக்கு நானும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இரண்டு, மூன்று கூட்டங்களை அதிகாரிகளுடன் கலந்து பேசி அவர்களிடத்திலே, வணிகரிடத்திலே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. விரைவிலே அதிலே வெற்றி காணும் அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் வளர்ச்சித் துறையில் தமிழுக்கு தமிழறிஞர்கள் நினைவாகவும் பல்வேறு விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. பிப்ரவரி 21 ஆம் நாளினை உலகத் தாய்மொழி நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதேபோல பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த ஏப்ரல் 29 ஆம் நாளினை தமிழ்க் கவிஞர் நாளாகவும், அதேபோல வீரமாமுனிவர் பிறந்த நவம்பர் 8 ஆம் நாளினை தமிழ் அகராதியியல் நாளாகவும் அரசின் சார்பில் ஆண்டுதோறும் கடைபிடித்து வருகிறோம்.

இவ்விழாவினைக் கொண்டாடி வருவதோடு முதலமைச்சருடைய உத்தரவின் அடிப்படையில் ஜூலை 18 ஆம் நாளினை தமிழ்நாடு நாளாகவும், ஜனவரி 25 ஆம் நாளினை தமிழ்மொழித் தியாகிகள் நாளாகவும் கடைபிடிக்கிறோம். தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்கள் பிறந்த பிப்ரவரி 19 ஆம் நாளினை தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக கொண்டாடுகிறோம். இவ்வாண்டு முதல் வருகிற ஜூன் முதல் முத்தமிழறிஞர் அய்யா கலைஞருடைய பிறந்த நாளை செம்மொழி நாளாகவும் கொண்டாடப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

திருவள்ளுவர் சிலை! வெள்ளி விழா!

கழக அரசு அமைந்தவுடன் முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்கு சென்றார்கள். இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சந்தித்தார்கள். திருக்குறளுக்கு பெருமை சேர்க்கும் விதமாக பல்வேறு கோரிக்கைகள் வைத்திருந்தாலும் குறிப்பாக, திருக்குறளுக்கு பெருமை சேர்க்கும் வாயிலாக திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க கோரிக்கை வைத்தார்கள். இது தொடர்பாக பல முறை வலியுறுத்தியும் கோரிக்கை இன்றுவரை நிறைவேறாமல் இருக்கிறது. அதேநேரத்திலே அய்யன் திருவள்ளுவருக்கு பெருமை சேர்க்கும் வண்ணமாக முக்கடல் சந்திக்கும் குமரிக் கடலிலே முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களால் 2000 ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட 133 அடி உயர அய்யன் வள்ளுவர் சிலை நிறுவப்பட்டு, 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி வெள்ளிவிழா நிகழ்ச்சி சிறப்பாக உலகெங்கும் உள்ள தமிழர்கள் பெரிதும் போற்றுகின்ற எழுச்சி விழாவாக பேரறிவுச் சிலை என அறிவித்து முதலமைச்சர் அவர்கள் அந்த நிகழ்ச்சியை சிறப்பாக நடத்த உத்தரவிட்டார்கள். அதேபோல இனி வள்ளுவம் தழைக்கும், மக்கள் நெஞ்சில் என்றும் நிலைக்கும். மேலும், UNESCO வாயிலாக திருக்குறளை உலக நினைவுக் கருவூலமாக நிலைநிறுத்துவதற்கான திட்டப் பணிகள் முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனைப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அறிஞர்களுக்கு அருந்தொண்டாற்றி வரும் தமிழறிஞர்களை பெருமைப்படுத்தும் வகையில் தமிழ் வளர்ச்சி இயக்கம் வாயிலாக 80 விருதுகளும், அகரமுதலித் திட்ட இயக்கம் வாயிலாக ஐந்து விருதுகளும், மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் வாயிலாக மூன்று விருதுகளும் மொத்தம் 88 விருதுகளும், அதில் கடந்த நான்கு ஆண்டுகளில் குறிப்பாக, தகைசால் தமிழர் விருது திரு. சங்கரய்யா அவர்களுக்கும், அதேபோல அய்யா திரு. நல்லகண்ணு அவர்களுக்கும், ஆசிரியர் திரு. வீரமணி அய்யா அவர்களுக்கும், அதேபோல சமிபத்தில் மறைந்த முனைவர் மரியாதைக்குரிய குமரி ஆனந்தன் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஆண்டுதோறும் திருவள்ளுவர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராஜர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருதுகள் உட்பட 29 வகைப்பாடுகளிலே 79 அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பாக செயல்படும் ஒரு தமிழ் அமைப்புக்கு என மொத்தம் 80 விருதுகள் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

அதுபோல அகரமுதலித் திட்ட இயக்கம் வாயிலாக தேவநேயப் பாவணர் விருது, வீரமாமுனிவர் விருது, தூயதமிழ் ஊடக விருது, நற்றமிழ்ப் பாவலர் விருது, தூயதமிழ்ப் பற்றாளர் விருது ஆகிய ஐந்து விருதுகளும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் மூலம் இலக்கண விருது, இலக்கிய விருது, மொழியியல் விருது என மூன்று விருதுகளும், மேலும் 2024 ஆம் ஆண்டு முத்தமிழ் அய்யா கலைஞர் விருது என்ற புதிய விருதாக விருது அறிவிக்கப்பட்டு முதல் முறையாக முத்துவாவாசி அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தநேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களின் 97வது பிறந்தநாளை முன்னிட்டு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட வீடு வழங்கும் திட்டம், கனவு இல்லத் திட்டத்தின் மூலமாக தமிழ் இலக்கியத்திற்கான நோபல் பரிசு, சாகத்திய அகாடமி விருது, ஞானபீட விருது, செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் தொல்காப்பிய விருது, அய்யா கலைஞர் அவர்களின் பெயரிலே மத்திய செம்மொழி தமிழ் விருது ஆகிய விருதாளர்களுக்கு இல்லம் வழங்கும், கடந்த நான்கு ஆண்டுகளில் 22 அறிஞர்களுக்கு ரூ.30 கோடி மதிப்பில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. கனவு இல்லத் திட்டத்தின் நீட்சியாக மொழிபெயர்ப்பாளர்களுக்கான சாகத்திய அகாடமி விருது பெற்ற 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு ரூபாய் மூன்று கோடியே 80 இலட்சம் மதிப்பில் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### தமிழ் இருக்கை நிறுவிட நிதி!

அமெரிக்க நாட்டின் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் இன்றுவரை நான்கு கோடி ரூபாய் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். ஜெர்மனி நாட்டிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்திற்கு ரூபாய் ஒரு கோடியே 25 இலட்சமும் புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியவியல் என்ற துறை உருவாக்க இது வரை ஐந்து கோடியே 40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நவி மும்பை தமிழ்ச் சங்கத்திற்கு ரூபாய் 75 இலட்சமும், தில்லி தமிழ்ச் சங்கத்திற்கு ரூபாய் 50 இலட்சமும், சண்டிகர் தமிழ் மன்றத்திற்கு ரூபாய் 50 இலட்சமும், புவனேஸ்வர் தமிழ்ச் சங்கத்திற்கு ரூபாய் 15 இலட்சமும் என பிற மாநிலங்களில் இருக்கக்கூடிய தமிழ் அமைப்புகளுக்கு இன்றைக்கு நிதி வழங்கி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

### கணியன் பூங்குன்றனாருக்கு நினைவுத் தூண்!

தமிழ் வளர்ச்சித் துறையால் மலர் வணக்கம் செய்யப்படும் தமிழ் அறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கு, விரைவிலே விரைவுத் துலங்கல் குறியீடு (QR CODE) பொருத்துகின்ற பணி முடிவிற்கு வரவிருக்கிறது. மேலும், இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் கவிஞர் தமிழ்ஒளி அவர்களுக்கு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மார்பளவுச் சிலை அமைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் அதேபோல, கவிஞர் முடியரசன் அவர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் திருவுருவச் சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கணியன் பூங்குன்றனாருக்கு சிவகங்கை மாவட்டம், மகிபாலன்பட்டியில் நினைவுத் தூண் அமைக்கப்பட்டு, மக்கள் பார்வைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. பெரும்புலவர் கபிலருக்கு கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூரில் நினைவுத் தூண் மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

### நூலாசிரியர்கள் - பதிப்பகத்தாருக்கு பரிசு!

கடந்த நான்காண்டுகளில் 226 நூலாசிரியர்கள், 221 பதிப்பகத்தார்களுக்கு பரிசுத் தொகையாக ரூபாய் 1 கோடியே 4 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டு முதல் சிறந்த நூல் எழுதிய நூலாசிரியருக்கான பரிசுத் தொகையானது ரூபாய் 30 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாக அந்தத் தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது. அண்ணல் அம்பேத்கரின் படைப்புகளை எளிய தமிழில் மொழிபெயர்த்து மக்கள் பதிப்பாக வெளியிட ரூபாய் 51 இலட்சம் மதிப்பீட்டில் முதல் பத்து தொகுதிகளுக்கான தொகை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு, கடந்த 13-1-2025 ஆம் நாளன்று வெளியிடப்பட்டது மட்டுமல்லாமல், நேற்றைக்கு முந்தினம் நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் தமிழாக்கம் செய்யப்பட்ட அண்ணல் அம்பேத்கரின் இரண்டு நூல்களை முதலமைச்சர் அவர்கள் வெளியிட அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பேரன் பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள் பெற்றுக்கொண்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

“ஆதிக்கம் செலுத்துகிற மொழி
குயிலாகக் கூவி வந்தாலும் –
மயிலாக ஆடி வந்தாலும் மயங்கிடோம்
அன்னைத் தமிழ் காப்பதற்கு
ஆவி தரவும் தயங்கிடோம்!”

கலைஞர் படைப்புகள் – நாட்டுடைமை!

என்று தமிழுக்காக முழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்கள் படைத்த அனைத்துப் படைப்புகளையும் அரசு நாட்டுடைமையாக்கிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக எந்தத் தொகையும் பெற்றுக்கொள்ளாமல் இன்றைக்கு அதை வழங்கிய முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் குடும்பத்தாருக்கு அவையின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், கடந்த நான்காண்டுகளில் மட்டும் 32 அறிஞர்களின் 1,442 நூல்கள் நாட்டுடைமை செய்யப்பட்டு, நூலுரிமைத் தொகையாக ரூபாய் 3 கோடியே 80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. உலகின் தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களிலும், நூலகங்களிலும் உலகமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட தமிழின் மிகச் சிறந்த நூல்களை இடம்பெறச் செய்திட ரூபாய் 2 கோடியும், நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் கருத்துகளையும், சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும்வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்திட நான்காண்டுகளில் ரூபாய் 2 கோடியே 72 இலட்சமும், தமிழ் இலக்கியத் திறனை மேம்படுத்தும் வகையில், திறனறித் தேர்வு நடத்தப்பட்டு தேர்வு செய்யப்பட்ட 1,500 பள்ளி மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக திங்கள் தோறும் ரூ.1,500/- வழங்கப்பட்டு வருகிறது.

ரூ.1,500/- வீதம் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூபாய் 15 கோடியும், ‘தமிழ் பரப்புரைக் கழகம்’ திட்டத்திற்காக தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூபாய் 2 கோடியும், தமிழ்நாட்டில் உள்ள 6,218 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் முத்தமிழறிஞர் ஐயா கலைஞரின் தமிழ் மன்றம் மூலமாக தமிழ்க்கூடல் நிகழ்ச்சிகள் நடத்திட ரூபாய் 16 கோடியே 79 இலட்சம் நிதி அதற்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும், கல்லூரி மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் தமிழ் மன்றங்கள் புதியதாக தோற்றுவித்து தமிழ்ச் சார்ந்த போட்டிகள் ஆண்டுதோறும் நடத்திட வைப்புத் தொகையாக 100 கல்லூரிகளுக்கு 5 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

திருக்குறள் முற்றோதல் செய்த 600 மாணவர்களுக்கு நான்காண்டுகளில் ரூபாய் 87 இலட்சமும், தமிழ்நாடு நாள் விழாவினை முன்னிட்டு 38 மாவட்டங்களிலும் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட, மாநில அளவில் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்த ரூபாய் 1 கோடியே 71 இலட்சமும், முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் நாளானது ‘செம்மொழி நாளாக’ அறிவிக்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் மேல்நிலை மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திட ரூபாய் 1 கோடியே 87 இலட்சமும், 38 மாவட்டத்திற்கு ‘இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை’ நடத்திட ரூபாய் 77 இலட்சமும், கல்லூரி மாணவர்கள் பயனுறும் வகையில் ‘இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை’ மற்றும் இலக்கிய வினாடி வினா போட்டியும் நடத்திட ரூபாய் 61 இலட்சமும், தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் ‘தமிழால் முடியும்’ என்ற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி நடத்திட ரூபாய் 47 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

### 48 துறைகளுக்கான சொல் அகராதிகள்!

மேலும், கடந்த நான்காண்டுகளில் பல்வேறு போட்டிகளுக்கு பரிசுத் தொகையாக ரூபாய் 7 கோடியே 18 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழில் உள்ள அனைத்து சொற்களையும் தொகுத்து சொற்குவை வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசு அலுவலகப் பயன்பாட்டுக்கான ஆட்சி சொல்லகராதி, மருத்துவ கலைச் சொல்லகராதி, அரசின் 48 துறைகளுக்கான சொல் அகராதிகள், வட்டார வழக்கு சொற்பொருள் அகராதி என பல்வேறு அகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

## பாவேந்தரின் உன்னத உணர்வுகளுக்கு ஏற்றவாறு தமிழுக்குத் தொண்டாற்றி வருகிறார் நமது முதல்வர்!

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் - “செம்மொழி” நாளாகக் கொண்டாடப்படும்!

## ஏ.கோவிந்தசாமி நினைவகம் - 21 சமூக நீதிப் போராளிகளுக்கு மணி மண்டபம்!

**செய்தி மக்கள் தொடர்புத் துறையை பொறுத்தவரை, ஒரு சிறிய ஒப்பீடு செய்ய விரும்புகிறேன். அதாவது, கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 22 மணிமண்டபங்கள், 4 திருவுருவச்சிலைகள், 2 நினைவுச் சின்னம், 1 நினைவுத்தூண், 1 அரங்கம் என மொத்தம் 30 மட்டுமே அமைக்கப்பட்டது. ஆனால், முதலமைச்சர், அண்ணன் தளபதி அவர்களுடைய அரசு, திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, 3 அரங்கங்கள், 8 மணிமண்டபங்கள், 28 சிலைகள் என ஏறத்தாழ 39 திறந்து வைக்கப்பட்டுள்ளது.**